சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம்–கல்வி–விடுதிகள்–2014–15–பத்து புதிய ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகள் துவங்குதல்–ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண்.4

நாள்.09.01.2015
திருவள்ளுவர் ஆண்டு 2045
மார்கழித் திங்கள் 25–ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடிதம் எண்.த1/21864/2014
நாள்.26.08.2014, 10.11.2014 மற்றும் 04.12.2014.

******

ஆணை:

2014–2015 –ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

"தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால் 2014–2015 –ஆம் கல்வி ஆண்டில் புதிதாக கீழ்க்காணும் மாவட்டங்களில் 10 கல்லூரி விடுதிகள் துவங்கப்படும்."

| வ.எண். | மாவட்டம், இடம் | விடுதிகள் |
|---|---|---|
| | மாணவியர் விடுதி | |
| 1. | பெரம்பலூர் (வேப்பந்தட்டை மற்றும் வேப்பூர்) | 2 |
| 2. | புதுக்கோட்டை | 1 |
| 3. | தஞ்சாவூர் | 1 |
| 4. | மதுரை | 1 |
| 5. | வேலூர் | 1 |
| 6. | கோயம்புத்தூர் | 1 |
| | மாணவர் விடுதி | |
| 7. | திருச்சிராப்பள்ளி | 1 |
| 8. | திருநெல்வேலி | 1 |
| 9. | சென்னை | 1 |
| | மொத்தம் | 10 |

இதற்கான செலவினம் ரூ.2.60 கோடி ஆகும்.

(த.தி.பா)..

2. இது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பில், இத்துறையின் கீழ் மொத்தம் 1304 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கிவருகின்றன என்றும், தமிழ்நாட்டில் உள்ள ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு வருவதாலும், இந்நேர்வில் பொதுமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் புதிதாக விடுதியினை தோற்றுவிக்க கோரி தரும் கோரிக்கை மனுக்கள் மற்றும் சட்டமன்ற வினாக்கள் என அநேக மனுக்கள் தொடர்ந்து பெறப்பட்டு வருகிறது என்றும், எனவே, 2014–2015 –ஆம் கல்வி ஆண்டில் ஒரு விடுதிக்கு 50 மாணவர்/மாணவியர் தங்கும் 10 புதிய கல்லூரி விடுதிகளை கீழ்க்கண்ட இடங்களில் துவங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உரிய அரசாணையினை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ. எண். | மாவட்டம் | விடுதிகள் துவங்க வேண்டிய இடத்தின் பெயர் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1. | பெரம்பலூர் | வேப்பூர் | மாணவியர் |
| 2. | பெரம்பலூர் | வேப்பந்தட்டை | மாணவியர் |
| 3. | புதுக்கோட்டை | மருதகோன்விடுதி | மாணவியர் |
| 4. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | மாணவியர் |
| 5. | மதுரை | மதுரை | மாணவியர் |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | மாணவியர் |
| 7. | வேலூர் | வேலூர் | மாணவியர் |
| 8. | சென்னை | சென்னை | ஆராய்ச்சி/ முதுகலை / இளங்கலை பட்டதாரி மாணவர் |
| 9. | திருச்சி | திருச்சி | மாணவர் |
| 10. | திருநெல்வேலி | திருநெல்வேலி | மாணவர் |

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று மேலே பத்தி 2–ல் உள்ளவாறு 10 புதிய ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவ / மாணவியர் விடுதிகளைத் துவங்க அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இக்கல்லூரி விடுதிகளுக்கு ரூ.9,300/–34,800/– +G.P.4600 என்ற சம்பள விகிதத்தில் 10 பட்டதாரி காப்பாளர் / காப்பாளினி பணியிடங்களும் ரூ.4800–10,000/– +G.P.–1300/– என்ற சம்பள விகிதத்தில் 10 சமையலர் மற்றும் 10 காவலர் பணியிடங்களும் மற்றும் ரூ.2000/– தொகுப்பூதியத்தில் 10 துப்புரவாளர் பணியிடங்களும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது

5. மேலே பத்தி 3–ல் புதிதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 10 புதிய கல்லூரி விடுதிகளுக்கு ஓராண்டிற்கு தொடரும் செலவினம் ரூ.1,78,58,680/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) மற்றும் 2014–15–ம் (நடப்பாண்டிற்கு) ஆண்டில் தொடரும் மற்றும் தொடராச் செலவினமாக ரூ.72,33,380/– (ரூபாய் எழுபத்தியிரண்டு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து மூன்னூற்றி எண்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(த.தி.பா)...

ஓராண்டிற்கு செலவினம்

| | | |
|---|---|---|
| 1. | சம்பள இனத்தில் ஒரு ஆண்டிற்கு ஏற்படும் தொடரும் செலவினம் | ரூ.1,14,91,680/– |
| 2. | சம்பளம் இல்லா இனத்தில் ஒரு ஆண்டிற்கு ஏற்படும் தொடரும் செலவினம் | ரூ. 63,67,000/– |
| | மொத்தம் | ரூ. 1,78,58,680/– |

நடப்பாண்டிற்கு செலவினம்

| | | |
|---|---|---|
| 1. | சம்பள இனத்தில் ஜனவரி 2015 முதல் பிப்ரவரி 2015 வரை தொடரும் செலவினம் | ரூ. 19,15,280/– |
| 2. | சம்பளம் இல்லா இனத்தில் ஜனவரி 2015 முதல் மார்ச் 2015 வரை ஏற்படும் தொடரும் செலவினம் | ரூ. 18,08,100/– |
| 3. | தொடரா செலவினம் | ரூ. 35,10,000/– |
| | மொத்தம் | ரூ. 72,33,380/– |

6. மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன் 277 கல்வி- பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II மாநிலத்திட்டம் "KD மாணவரில்லங்கள்"

| வ. எண் | இனம் | கணக்குத் தலைப்பு | ஓராண்டுக்கான தொடரும் செலவினம் | 2014–15 நிதியாண்டிற்கான தொடரும் செலவினம் (ஜனவரி மற்றும் பிப்ரவரி 2015 சம்பள இனம்) | தொடரா செலவினம் |
|---|---|---|---|---|---|
| 1 | 01 அடிப்படைச் சம்பளம் | 2225 01 277 KD 0101 | ரூ.55,95,600 | ரூ.9,32,600 | -- |
| 2 | 03 அகவிலைப்படி | 2225 01 277 KD 0316 | ரூ.56,56,080 | ரூ.9,42,680 | -- |
| 3 | 33–04 தொகுப்பூதியம் | 2225 01 277 KD 3304 | ரூ.2,40,000 | ரூ.40,000 | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 05–02 ஏனைய சில்லரைச் செலவுகள் | 2225 01 277 KD 0521 | ரூ.4,52,000 | ரூ.1,35,600 | --- |
| 5 | 05–05 அறைகலன்கள் | 2225 01 277 KD 0558 | --- | --- | ரூ.21,50,000 |
| 6 | 06–01 வாடகை | 2225 01 277 KD 0610 | ரூ.14,40,000 | ரூ.3,60,000 | --- |
| 7 | 19 இயந்திரமும், சாதனமும்–01 வாங்குதல் | 2225 01 277 KD 1913 | --- | --- | ரூ.4,70,000 |
| 8 | 24 – 00 பொருட்களும் வழங்கலும் | 2225 01 277 KD 2401 | --- | --- | ரூ.7,90,000 |
| 9 | 34–00 நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த காலமுறை வெளியீடுகள் வழங்குதல் | 2225 01 277 KD 3420 | --- | --- | ரூ.1,00,000 |
| 10 | 67–09 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் | 2225 01 277 KD 6794 | ரூ.44,75,000 | ரூ.13,12,500 | --- |
| | | மொத்தம் | ரூ.1,78,58,680 | ரூ.37,23,380 | ரூ.35,10,000 |

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. தொடரா செலவினத்தில் ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

| வ. எண் | செலவின விவரம் | கல்லூரி விடுதி | |
|---|---|---|---|
| | | 50 மாணவியர்கள் தங்கும் விடுதி | 50 மாணவர்கள் தங்கும் விடுதி |
| 1. | 5 லிட்டர் அரவை இயந்திரம் | ரூ.12,500/– | ரூ.12,500/– |
| 2. | சமையல் பாத்திரங்கள் | ரூ.20,000/– | ரூ.20,000/– |
| 3. | நூலக புத்தகங்கள் | ரூ.10,000/– | ரூ.10,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | விடுதி அலுவலக அறைகலன் | ரூ.40,000/- | ரூ.40,000/- |
| 5. | சமையல் எரிவாயு இணைப்பு | ரூ.30,000/- | ரூ.30,000/- |
| 6. | 22 லிட்டர் குக்கர் | ரூ.5,000/- | ரூ.5,000/- |
| 7. | போர்வை (ரூ.250 X 50) | ரூ.12,500/- | ரூ.12,500/- |
| 8. | மாணவர்களுக்கான அறைகலன் | ரூ.1,75,000/- | ரூ.1,75,000/- |
| 9. | வண்ணத் தொலைக்காட்சி பெட்டி | ரூ.6,000/- | ரூ.6,000/- |
| 10. | விளையாட்டு சாதனம் | ரூ.2,000/- | ரூ.2,000/- |
| 11. | மின்னனு எடை இயந்திரம் | ரூ.5,000/- | ரூ.5,000/- |
| 12. | சுகாதார குட்டை தகளி | ரூ.25,000/- | - |
| 13. | முதலுதவிப் பெட்டி | ரூ.3,500/- | ரூ.3,500/- |
| 14. | மின் விசிறிகள் (ரூ.1500x8) | ரூ.12,000/- | ரூ.12,000/- |
| | மொத்தம் | ரூ.3,58,500/- | ரூ.3,33,500/- |

| | |
|---|---|
| 7 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்கு ஏற்படும் தொடராச் செலவினம். (ரூ.3,58,500 x 7) | ரூ.25,09,500/- |
| 3 கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்கு ஏற்படும் தொடராச் செலவினம். (ரூ.3,33,500 x 3) | ரூ.10,00,500/- |
| மொத்தம் | = ரூ.35,10,000/- |

9. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் பணிபுரிவோர் அடிப்படை சம்பளம் மற்றும் பிற படிகளை விதிமுறைகளின் படி பெற தகுதியுடைவர்கள் ஆவார்கள். மேலும் புதிதாக துவங்கப்படும் 10 விடுதிகளும் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதற்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகின்றது.

10. இது ஒரு 'புதுதுணைப்பணி' குறித்த(New Instrument of Service) செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள்

(த.தி.பா)..

நிதித் (வரவு-செலவு பொது I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு-செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் 2014-2015 -ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக்குறிப்பினை நிதித்(வரவு-செலவு பொது I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. விடுதிகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை உரிய பணி விதிகளின்படி நிரப்பப்பட வேண்டும். மேலும், மேலே பத்தி 2-ல் கண்டுள்ள 10 புதிய விடுதிகளும் முறையாக துவங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.72323/நிதித்(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறை/2014-1, நாள்.06.01.2015 மற்றும் அ.சா.கு.எண்.1579/நிதித்(மை.ம.ஆ.பி)துறை/2015, நாள்.08.01.2015 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2080 (இரண்டாயிரத்து எண்பது)-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5,
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சென்னை, திருச்சி, திருநெல்வேலி.
மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சென்னை, திருச்சி, திருநெல்வேலி.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAS), சென்னை-9.

நகல்:-
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (CMPC)/ஆதி(ம)பந துறை, சென்னை-9.
நிதித் (வ.செ.பொI/வ.செ.பொ.II)துறை, சென்னை-9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
அரசு செயலரின் தனிச்செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
இருப்புகோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.